Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, NOVEMBER 16, 2023

வியாழக்கிழமை நவம்பர் 16, 2023 | ஒளி: 09 கதிர் 129 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE

## மது விலையில் மாற்றமில்லை

2024 ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் மதுபான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள போதிலும், அதன் மூலம் மதுபானங்களின் விலையை அதிகரிக்க வாய்ப்பில்லை என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மதுபானசாலைகளை திறக்கும் காலத்தை அவ்வப்போது திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என கலால் திணைக்களத்தின் ஊடக பேச்சாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செவ்வாய்க்கிழமை (14) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

## "மைத்திரிக்கு நட்டஈடு உத்தரவு ராஜபக்ஷர்களுக்கு இல்லையா?"

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலைத் தடுக்க தவறிய குற்றச்சாட்டில் குற்றவாளிகளாக இனம்காணப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட 5 பேரும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈடு செலுத்த வேண்டுமென உத்தரவிட்ட உயர்நீதிமன்றம், நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்களாக அடையாளம் காணப்பட்ட ராஜபக்ஷ சகோதரர்கள், நாட்டு மக்களுக்கு நஷ்ட ஈடு செலுத்த வேண்டுமென ஏன் உத்தரவிடவில்லையெனத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி.யும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் கேள்வி எழுப்பினார்.



தொடர்ச்சி P2

## ராஜபக்ஷக்களின் குடியுரிமை என்ன?

நாட்டின் பொருளாதார பாதிப்புக்கு ராஜபக்ஷ சகோதரர்கள் பொறுப்புக் கூற வேண்டும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஆகவே ராஜபக்ஷக்களின் குடியுரிமை தொடர்பில் பாராளுமன்றம் எடுக்கும் தீர்மானம் மற்றும் நிலைப்பாடு என்னவென ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான கலாநிதி ஹர்ஷ டி சில்வா கேள்வி எழுப்பினார்.



தொடர்ச்சி P2

### பிறந்தநாள் கேக்கை வெட்டி கையை கழுவியபோது

# சிறுமியின் உயிரைக் குடித்த 'நீர் திறப்பான்' கொங்கிறீட்






கொழும்பு, கிராண்ட்பாஸ் வேஹெர கொட கனிஷ்ட வித்தியாலத்தில் நீர் குழாய்களை இணைத்து, நீர் திறப்பான்கள் பொருத்தி நிர்மாணிக்கப்பட்டிருந்த தூண் சரிந்து விழுந்ததில், சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மேலும் ஐந்து மாணவர்கள், வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வருகின்றனர். சிறுவர்களின் மீது விழுந்த இந்த 'நீர் திறப்பான்' கொங்கிறீட் தூண். செங்கல் கற்களையும் இடையில் செறுகி சுமார் 6 அடி உயரத்துக்கு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் வெல்லம்பிட்டியைச் சேர்ந்த, 6 வயது சிறுமியான ஷெஹன்சா நிட்சராணி என்ற மாணவியே இவ்வாறு மரணமடைந்துள்ளார். இந்த சம்பவம், புதன்கிழமை (15) பகல்வேளையில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## "தவறான தெரிவு வங்குரோத்தாகும்"

### அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை தற்போது கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது



2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் சிறந்த ஒருவரை மக்கள் தெரிவு செய்ய வேண்டும். தவறான ஒருவரை தெரிவு செய்தால் மீண்டும் வங்குரோத்து நிலைக்கே நாடும் மக்களும் சேல்ல வேண்டி ஏற்படும் என நீதி,சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ எச்சரித்தார்.

தொடர்ச்சி P2



## "அறிக்கையை அனுப்பிவிட்டேன்"

இராஜாங்க அமைச்சர் டயான கமகே, எம்.பிக்களான சுஜீத் பெரேரா, ரோஹன பண்டார ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பான விசாரணைக்குழுவின் அறிக்கை சிறப்புரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்தார்.

தொடர்ச்சி P2

## நிலாவத்தையில் எலும்புக் கூடு

செ.தி.பெருமாள்

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் சாமிமலை ஓல்டன் தோட்ட நிலாவத்தை பிரிவில் மனித எச்சம், எலும்புக் கூடு கிடப்பதைக் கண்ட அப்பிரிவு மக்கள் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

அதேதோட்டத்தைச் சேர்ந்த கிட்ணசாமி கிருஷ்ணசாமி 70 வயதுடைய நபர் கடந்த நான்கு மாதங்களுக்கு முன் காணாமல் போயிருந்தார். இந்த எலும்புக் கூடு அவருடையதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தலைமையிலான பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

### மாகாண சபைத் தேர்தலை

## நடத்தும் எண்ணம் இல்லை என்பது தெளிவு

மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தும் எந்தவொரு எண்ணமும் அரசாங்கத்துக்கு இல்லை என்பதனை 2024ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் உறுதிப்படுத்தியுள்ளதுடன், மாகாணங்களின் அதிகாரங்களை பறித்தது இன்னும் மத்தியில் குவிக்கும் திட்டமும் வெளிப்பட்டுள்ளதாக தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பி.யுமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## மாணவர்களின் இடைவிலகலை தடுக்க செயற்றிட்டம் அவசியம்

### ஐ.நா பிரதிநிதிகளிடம் வடமாகாண ஆளுநர் எடுத்துரைப்பு

பு.கஜிந்தன்

பாடசாலை மாணவர்களின் இடைவிலகல் அதிகரித்துள்ள நிலையில், அதனை தடுப்பதற்கான செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும், சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகாமல் இருப்பதற்கு தேவையான விழிப்புணர்வு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதிய பிரதிநிதிகளிடம், வட மாகாண ஆளுநர் கோரிக்கை விடுத்தார்.



தொடர்ச்சி P2

## "இழப்பீடு கோரலாம்; கோர வேண்டும்"



நாட்டின் பொருளாதாராத்தை சீரழித்த பொருளாதார கொலைகாரர்களாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள ராஜபக்ஷ சகோதரர்களிடமிருந்து நாட்டு மக்கள் ஒவ்வொருவரும், பொருளாதார அழிவின் காரணமாக தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பிற்கு இழப்பீடு கோரலாம். கோர வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## புதையுண்ட நால்வரும் சடலங்களாக மீட்பு

பலாங்கொட-கவரன்ஹேன பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவில் புதையுண்டு காணாமல் போனயிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரின் சடலங்களும் மீட்கப்பட்டன.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர், கடந்த ஞாயிற்றுக்கிழமை (12) இரவு ஏற்பட்ட மண்சரிவில் காணாமல் போயிருந்தனர்.

தொடர்ச்சி P2



## கொக்குதொடுவாய் பறி போகின்றதா?

### தமிழ் மீனவர்களில் இடங்களை பெரும்பான்மை இனத்தவர்கள் ஆக்கிரமித்து வருகின்றனர்

சண்முகன் தவசீலன்

முல்லைத்தீவு கொக்குதொடுவாய் வடக்கு 15ஆம் கட்டை பகுதியில் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த சிங்கள மீனவர்கள் அத்துமீறி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றார்கள். இதனால் குறித்த பகுதியில் மீன்பிடியில் ஈடுபடும் தமிழ் மீனவர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

புலிபாய்ந்தகல் பகுதியில் பெரும்பான்மையினத்தை சேர்ந்த மீனவர்கள் அத்துமீறி வாடி அமைத்து தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை பிரதேச செயலகத்தினால் அறிவித்தல் வழங்கப்பட்டு வாடிகளை அகற்றுமாறு கோரி பதாகை காட்சிபடுத்தப்பட்டு இருந்தது. இந்நிலையில், கொக்குதொடுவாய் 15ஆம் கட்டை பகுதியில் இவர்கள் வாடிஅமைத்து சட்டவிரோத தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

தொடர்ச்சி P2

# மட்டக்களப்பில் அமெரிக்க iHub

### மட்டக்களப்பு iHub நாடு முழுவதுமுள்ள இளைஞர்களிடையே தொடர்புகளையும் வளர்க்கும்

ரீ.எல்.ஜவ்பர்கான், நூர்தீன்

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் ஒரு புதிய அமெரிக்க புத்தாக்க மையத்தினை (iHub) புதன்கிழமை (15) மட்டக்களப்பில் திறந்து வைத்ததுடன், சிறப்பு விருந்தினராக இணைந்துகொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானையும் வரவேற்றார்.

அமெரிக்க தூதரகம் மற்றும் ட்ரீம் ஸ்பேஸ் அகடமி ஆகியவற்றிற்கிடையிலான ஒரு கூட்டு முயற்சியாக மட்டக்களப்பில் திறந்து வைக்கப்படும் இந்த iHub கிழக்கு மாகாண இளைஞர்களை வலுப்படுத்துதல், அறிவுப் பரிமாற்றத்தைப் பேணி வளர்த்தல் மற்றும் அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படும் மக்களுக்கிடையிலான உறவுகளை மேம்படுத்துதல் ஆகிய விடயங்களை நோக்கமாகக் கொண்டுள்ளது. மட்டக்களப்பில் உள்ள அமெரிக்க iHub இனைத் தவிர, கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் மற்றும் மாத்தறை ஆகிய இடங்களில் ஊடாடும் American Spacesகளை அமெரிக்கத் தூதரகம் கொண்டுள்ளது. "இலங்கையிலுள்ள எமது ஐந்தாவது American Space ஆகிய மட்டக்களப்பு iHub, கிழக்கு மாகாணத்தை அமெரிக்காவுடன் இணைக்கும் முக்கிய இணைப்பாக இருப்பதுடன் நாடு முழுவதுமுள்ள இளைஞர்களிடையே தொடர்புகளையும் வளர்க்கும்" என அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் தெரிவித்தார். "இந்த ஆண்டு எமது இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளின் 75 ஆண்டு நிறைவை நாம் கொண்டாடுகையில், இப்பிராந்தியத்திலுள்ள இளைஞர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு, புத்தாக்கம், தலைமைத்துவம், கல்வி மற்றும் ஒத்துழைப்பை பேணிவளர்த்தல் போன்ற விடயங்களில் ஒரு பெரும் நம்பிக்கையை இந்நிலையம் வழங்குகிறது.




தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சிறுமியின் உயிரைக் குடித்த ‘நீர் திறப்பான்’ கொங்கிறீட்

சிறுமியான ஷெஹன்சா நிட்சராணி தனது ஆறாவது பிறந்தநாளை 15ஆம் திகதி புதன்கிழமை கொண்டாடினார். பாடசாலையில் தன்னுடைய வகுப்பு நண்பிகள், நண்பர்களுடன் கேக் வெட்டி உண்டதன் பின்னர் கைகளை கழுவுவதற்காக, நீர் திறப்பான் அருகில் சென்றிருந்த போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது என பாடசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதிக்கப்பட்ட ஏனைய ஐவரும் முதலாம் தரத்தில் கல்விப்பயிலுபவர்கள். காயமடைந்த அறுவரில், சிறுமியான ஷெஹன்சா நிட்சராணியும் அடங்கியிருந்தார். அவர் லேடி ரிஜ்வே வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றிருந்த போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஏனையோர், கொழும்பு தேசிய வைத்திசாலையில் தங்கியிருந்து சிகிச்சைப்பெற்று வருகின்றனர் எனத் தெரிவித்த கிராண்ட்பாஸ் பொலிஸார், இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருவதாக தெரிவித்தனர்.

## “மைத்திரிக்கு நட்டஈடு உத்தரவு ராஜபக்ஷர்களுக்கு இல்லையா?”

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (15) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 2ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் மேலும் பேசுகையில்,

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ உட்பட முன்னாள் நிதியமைச்சர்களான மஹிந்த ராஜபக்ஷ, பஷில் ராஜபக்ஷ ஆகியோர் பொறுப்புக் கூற வேண்டும்.

அத்துடன், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், திறைசேரியின் செயலாளர் எஸ்.ஆர்.ஆடிகல, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்.டபிள்யூ.டி.லக்ஷ்மன், முன்னாள் ஜனாதிபதி செயலாளர் பி.பி. ஜயசுந்தர உட்பட மத்திய வங்கியின் நாணய சபையின் உறுப்பினர்கள் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என்று பிரதம நீதியரசர் தலைமையிலான நீதியரசர் குழாம் தீர்ப்பளித்துள்ளது. இந்த குழாமில் ஒருவர் மட்டும் மாறுபட்ட தீர்ப்பை வழங்கியுள்ளார்.

இதே உயர்நீதிமன்றம்தான் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலை தடுக்க தவறிய குற்றச்சாட்டில் குற்றவாளிகளாக இனம்காணப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால உள்ளிட்ட 5 பேரும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு செலுத்த வேண்டுமென உத்தரவிட்டிருந்தது. ஆனால், நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களென ராஜபக்ஷ சகோதரர்களை அறிவித்த உயர் நீதிமன்றம், இவர்களினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடிமகனுக்கும் இவர்கள் நஷ்டஈடு செலுத்த வேண்டுமென ஏன் உத்தரவிடவில்லை? ராஜபக்ஷ சகோதரர்களிடம் தேவையானவளவுக்கு பணம் உள்ளது. வெளிநாடுகளிலும் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது. அந்த பணங்களை வெளிக்கொண்டு வந்தால் நாட்டின் பொருளாதார நெருக்கடியை ஓரளவுக்கு தீர்க்க முடியும். நாட்டின் பணம் களவாடப்பட்டதால்தான் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அதனால் மக்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றார்.

எனவே, நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமான ராஜபக்ஷ சகோதரர்கள் நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் நஷ்டஈடு செலுத்த வேண்டுமென உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்க வேண்டும் என்றார்.

## ராஜபக்ஷக்களின் குடியுரிமை என்ன?

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (15) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 2ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி நாட்டையும் மக்களையும் வங்குரோத்து நிலைக்கு தள்ளியவர்கள் யார்? என்பதை உயர்நீதிமன்றம் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தியுள்ளது. எனவே, உயர்நீதிமன்றத்தின் நீதியரசர்கள் உட்பட மனுதாரர்களுக்கு நாட்டு மக்கள் சார்பில் கௌரவத்தை தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

**பொருளாதார படுகொலையாளிகள் என்று முத்திரை குத்தப்பட்டுள்ள ராஜபக்ஷக்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் நாட்டில் வறுமையில் வாழ்வோரின் எண்ணிக்கை அதிகரித்தது.**

பொருளாதார படுகொலையாளிகள் என்று உயர்நீதிமன்றத்தினால் முத்திரை குத்தப்பட்டுள்ள ராஜபக்ஷக்கள் ஆட்சிக்கு வரும் போது நாட்டில் 30 இலட்சம் பேர் வறுமையால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் அவர்களின் வறுமையில் வாழ்வோரின் எண்ணிக்கை 70 இலட்சமாக உயர்வடைந்தது. நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. மக்கள் வாழ முடியாத நிலைக்கு தள்ளப்பட்டார்கள், வரிசை யுகம் ஏற்பட்டது. மக்கள் போராட்டங்கள் வெடித்தன. ஆட்சி மாறியது. இவ்வாறான நிலையில்தான் பொருளாதார பாதிப்புக்கு ராஜபக்ஷ சகோதரர்கள் உட்பட அரச உயர் அதிகாரிகள் பொறுப்புக் கூற வேண்டும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.ஆகவே இவர்களின் குடியுரிமை தொடர்பில் பாராளுமன்றம் எடுக்கும் தீர்மானம் மற்றும் நிலைப்பாடு என்ன? என்றும் வினவினார்.

## நடத்தும் எண்ணம் இல்லை என்பது தெளிவு

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (15) இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 2ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

வடக்கு,கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் தாயகம் என்பதனை அழிக்கும் திட்டம் இந்த வரவு - செலவுத் திட்ட உரையில் பிரதிபலித்தது. மாகாணங்களின் அதிகாரங்களை மத்தியில் குவிக்கும் திட்டங்களும் மாகாணங்கள் ஒருபோதும் தங்களுக்காகச் சிந்திக்க அனுமதிக்கப்படக்கூடாது என்ற இனத்துச் சிந்தனைகளும் இதில் வெளிப்பட்டுள்ளன.

இலங்கையை ஆட்சி செய்யும் இனத்துவ அரசுகள் இனப்படுகொலைகளைத்தான் நிகழ்த்தி வருகின்றன. நான் வடக்கின் முதலமைச்சராக இருந்த போது தமிழினப்படுகொலை தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினேன். அதன்பின்னர்தான் மாகாண சபைகளை வைத்திருப்பதில்லையென்ற தீர்மானத்தை ஆட்சியாளர்கள் எடுத்தனர். யுத்தம் முடிந்து 14 வருடங்களாகின்ற போதும் வடக்கில் இராணுவ இருப்பு குறைக்கப்படவில்லை 2 இலட்சம் இராணுவத்தினர் இன்றும் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர். அரச முகவர்களைப் பயன்படுத்தி பல்வேறு ஆக்கிரமிப்பு , அபகரிப்பு, குடியேற்றத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எமது நினைவு கூரல்கள் கூட நசுக்கப்படுகின்றன என்றார்.

## மாணவர்களின் இடைவிலகலை தடுக்க செயற்றிட்டம் அவசியம்

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதிய பிரதிநிதிகளுக்கும், வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸுக்கும் இடையில் ஆளுநர் மாளிகையில் விசேட கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை (14) நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி *Christian Skoog*, உதவி பிரதிநிதி *Begona Arellano*, கல்வி உத்தியோகத்தர் உள்ளிட்ட குழாத்தினர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். இதன்போதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

மாணவர்களின் கற்றால் செயற்பாடு முன்னெடுக்கப்படும் விதம், சிறுவர்களுக்கான திறன் மேம்பாட்டுச் செயற்பாடுகள், சிறுவர் துஷ்பிரயோகம், சட்டவிரோத செயற்பாடுகள், பெற்றோர்களுக்கு வழங்கப்பட வேண்டிய விழிப்புணர்வு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது ஆளுநரால், ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதிய பிரதிநிதிகளுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

பாடசாலை மாணவர்களுக்கான மேலதிக வகுப்புகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இதன்போது ஆளுநர் வலியுறுத்தினார். அதிகாலை தொடக்கம், இரவு வரை மாணவர்கள் பிரத்தியேக வகுப்புகளில் தங்க வைக்கபடுவதால் , மாணவர்களின் திறன் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு நேரம் ஒதுக்கப்படுவதில்லை என இதன்போது ஆளுநர் கூறினார்.

சாதாரண மற்றும் உயர்தர பரீட்சையின் பின்னர் மாணவர்களின் நிலைப்பாடு கவலைக்கிடமாகக் காணப்படுவதாகவும், இந்த நிலையை மாற்றி அமைப்பதற்குத் தேவையான ஆலோசனைகள் , வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

சிறுவர்களின் எதிர்காலம் தொடர்பில் பெற்றோர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளும், விழிப்புணர்வும் வழங்கப்பட வேண்டும் இந்த சந்திப்பின்போது வலியுறுத்தினார்.

## நிலாவத்தையில் எலும்புக் கூடு

ஹட்டன் நீதிமன்ற நீதவான் நேரில் பார்வையிட்டதன் பின்னர் எலும்புகள் டி.என்.ஏ. பரிசோதனைக்காக கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு கொண்டுச் செல்லப்படவுள்ளது.

இதேவேளை, ஹட்டன் தடையவியல் பொலிஸார், திடீர் மரண விசாரணை அதிகாரி ஆகியோரும் ஸ்தலத்துக்கு விரைந்துள்ளனர்.

## கொக்குதொடுவாய் பறி போகின்றதா?

குறித்த சம்பவத்தினால் மீனவர் சங்கத்தினர், கிராம அமைப்புக்கள் இணைந்து பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மீனவர்களிடம் பிரச்சினை தொடர்பாகக் கேட்டபோது குறித்த இடத்தினை பெரும்பான்மையினத்தை சேர்ந்த பிக்கு ஒருவர் தந்த இடமாகவும், தாம் அதனை வாங்கி விட்டதாகவும் அதனாலேயே இங்கே வாடி அமைத்து தொழில் செய்வதாகவும் கூறியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் முல்லைத்தீவு கடற்தொழில் திணைக்களத்திடம் குறித்த மக்கள் தெரியப்படுத்தியிருந்த வேளை அத்துமீறி தொழில் செய்யும் போது தமக்கு அறிவித்தல் வழங்குமாறும், தாம் உடனடியாக அவ் இடத்திற்கு வருவதாகவும் கூறியிருந்தனர். ஆனால் இவ்விடயம் தொடர்பாக தொலைபேசியில் தகவல் வழங்கி இருந்தும்

**முல்லைத்தீவு புலிபாய்ந்தகல், தண்ணிமுறிப்பு, கொக்குதொடுவாய் வடக்கு என இவ்வாறு தொடர்ச்சியாக அத்துமீறி பெரும்பான்மையின் மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள்.**

திணைக்களத்தினர் வருகை தரவில்லை எனவும் குறித்த பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மைய காலங்களில் தொடர்ச்சியாகத் தமிழ் மீனவர்கள் தொழில் செய்து வரும் இடங்களைப் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆக்கிரமித்து வருகின்றனர். முல்லைத்தீவு புலிபாய்ந்தகல், தண்ணிமுறிப்பு, கொக்குதொடுவாய் வடக்கு என இவ்வாறு தொடர்ச்சியாக அத்துமீறி பெரும்பான்மையின் மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

## புதையுண்ட நால்வரும் சடலங்களாக மீட்பு

அனர்த்த முகாமைத்துவ பிரிவினர், இராணுவம் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து காணாமல் போனவர்களைதேடும் பணியில் ஈடுபட்டிருந்தனர். இந்த நிலையில், அவர்களின் சடலங்கள், செவ்வாய்க்கிழமை (14) மாலை மீட்கப்பட்டன. மண்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் இறுதிக்கிரியைகள் அரச செலவில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## “தவறான தெரிவு வங்குரோத்தாகும்”

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (15) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 2ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு எச்சரித்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட நான்கு ஜனாதிபதிகளுக்கு எதிராக உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை தற்போது கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது என்றார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பாதிப்புக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யார் என்பது தொடர்பில் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்த தீர்ப்பை நான் ஆராய மாட்டேன். ஆனால் அந்த தீர்ப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பஷில் ராஜபக்ஷ ,அஜித் நிவாரட் கப்ரால் மற்றும் பி.பி. ஜயசுந்தர தொடர்பில் சில விடயங்களை வெளிப்படுத்த விரும்புகின்றேன்.

நாட்டு மக்களின் அடிப்படை உரிமையை மீறியுள்ளதாக உயர்நீதிமன்றத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள அஜித் நிவார்ட் கப்ராலை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்க வேண்டாம் என 2006ஆம் ஆண்டு நான் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அழுத்தமாக வலியுறுத்தினேன். ஆனால், ஒரு சிலரது தவறான ஆலோசனைகளை தொடர்ந்து அவரை ஆளுநராக மஹிந்த ராஜபக்ஷ நியமித்தார்.

இரண்டாவது நபராக அடையாளப் படுத்தப்பட்டுள்ள பி.பி.ஜயசுந்தர ஊழல் மோசடியுடன் தொடர்புடைய அரச நிர்வாகி என்று கோப் குழு விசாரணை ஊடாக உறுதிப்படுத்தப்பட்டது. அரச பதவிகளுக்கு இவர் தகுதியற்றவர் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் நீதிமன்றத்தின் தீர்ப்பினையும் பொருட்படுத்தாமல் இவருக்கு அரச உயர் பதவி வழங்கப்பட்டது.

## “அறிக்கையை அனுப்பிவிட்டேன்”

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (15) சபாநாயகர் அறிவிப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்ற வளாகத்தில் 2023 ஒக்டோபர் 20ஆம் திகதி மேலே குறிப்பிட்ட மூன்று உறுப்பினர்களுக்கு இடையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து இரு தரப்பிலிருந்தும் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் விரைவாக விசாரணைகளை நடத்தி அதனைப் பாராளுமன்றத்தில் அறிக்கையிடுவதற்காகப் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் குழுவொன்றை சபாநாயகர் நியமித்திருந்தார். இதற்கமைய இந்தக் குழுவின் உறுப்பினர்களாகப் பாராளுமன்ற உறுப்பினர்களான சமல் ராஜபக்ஷ, ரமேஷ் பத்திரன, கயந்த கருணாதிலக மற்றும் இம்தியாஸ் பாக்கீர் மாக்கர், தலதா அத்துகோரள மற்றும் இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர். இந்தக் குழு நான்கு தடவைகள் கூடியிருந்ததுடன், சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மேலதிகமாக இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவும் சாட்சியங்களைப் பெறுவதற்கு குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்கு சபாநாயகரினால் நியமிக்கப்பட்ட பாராளுமன்றக் குழுவின் அறிக்கை அதன் தலைவர் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷவினால் செவ்வாய்க்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளிக்கப்பட்டது.

## “இழப்பீடு கோரலாம்; கோர வேண்டும்”

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (15) விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

பொறுப்புவாய்ந்த எதிர்க்கட்சி என்றவகையில் நாங்கள் இந்த நாட்டின் பொருளாதார பேரழிவுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களை சட்டத்துக்கு முன் கொண்டுவந்தோம். அதற்காக எங்களுக்கு சிறந்த புத்திஜீவிகள் சபையுடன், திறமையான சட்டத்தரணிகளும் இருந்தனர். நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுசென்றவர்களை சட்டத்துக்கு முன்னால் கொண்டுசெல்ல வேண்டும் என நாங்கள் தொடர்ந்து தெரிவித்து வந்தோம். தற்போது உயர் நீதிமன்றம் இது தொடர்பாக வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியுள்ளது.

இந்த நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி நாட்டில் பேரழிவை ஏற்படுத்தியமைக்கு யார் பொறுப்புக்கூற வேண்டும் என்பதை உயர் நீதிமன்றம் பெயர் குறிப்பிட்டு தீர்ப்பளித்திருக்கிறது.

மக்களின் நம்பகத்தன்மை என்ற கொள்கைகளை கோட்டாபய ராஜபக்ஷ. மஹிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, நிவாட் கப்ரால், டபிள்யூ. டீ. லக்ஷ்மன், பீ.பீ. ஜயசுந்தர, ஆட்டிகல மற்றும் நாணயச்சபை மீறியுள்ளதாக தீர்ப்பளித்திருக்கின்றனர்.

## மட்டக்களப்பில் அமெரிக்க iHub

அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நீடித்த மற்றும் உறுதியான பங்காண்மையை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில், அனைத்து மக்களும் சௌகரியமாகவும், உத்வேகமாகவும் உணரும் ஒரு இடமாக இது விளங்கும் என நான் நம்புகிறேன்” என அவர் மேலும் தெரிவித்தார்.

புத்தகங்கள், டிஜிட்டல் வளங்கள், மல்டிமீடியா உள்ளடக்கங்கள் மற்றும் இணைய தரவுத்தளங்கள் உட்பட பலதரப்பட்ட இலவச வளங்களுக்கான அணுகலை வழங்குகின்ற புலமைசார் ஈடுபாட்டின் ஒரு மையமாக விளங்கும் வகையில் மட்டக்களப்பு *iHub* வடிவமைக்கப்பட்டுள்ளது.

வடபுல முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துக்கு

# வழி என்ன?

வடக்கிலிருந்து புலம்பெயர நேரிட்ட முஸ்லிம்கள் எதிர் கொள்ளும் சவால்களுக்குத் தீர்வுகாண முறையான வேலைத்திட்டத்தை அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

"வடக்கிலிருந்து புலம்பெயரச் செய்யப்பட்ட முஸ்லிம்களின் சவால்கள் இன்னும் தீர்ந்தபாடில்லை. 33 வருடங்கள் கடந்தும் முறையான வேலைத்திட்டங்கள் வகுக்கப்படவும் இல்லை. மீளக்குடியேறும் இம்மக்களின் முயற்சிகளை அங்குள்ள அரச அதிகாரிகளும் ஒரு சில அரசியல்வாதிகளும் தடுத்து நிறுத்தவே முயற்சிக்கின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (10) உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், மன்னார் மாவட்டத்திலுள்ள முஸ்லிம்களின் வாக்காளர் இடாப்பிலிருந்து



அவர்களின் பெயர்களை நீக்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. அரச அதிகாரிகளின் இத்தகைய செயல்கள் அப்பட்டமான இனச்சுத்திகரிப்பாகும்.

1990இல், வடக்கிலிருந்து புலிகள் இதே பாணியில்தான் முஸ்லிம்களை வெளியேற்றினர். இன்னும், இதே சிந்தனையில் அரச அதிகாரிகள் செயற்படுவது வெட்கக்கேடானது.

நான் அமைச்சராக இருந்தவேளை, முப்பதாயிரம் தமிழர்களை மீளக்குடியேற்றினேன். ஆனால், முஸ்லிம்களை குடியேற்ற வடக்கிலுள்ள அதிகாரிகள் விரும்பவில்லை. எனினும், அரபு நாடுகளின் உதவிகளைப் பெற்று பலத்த சவால்களுக்கு மத்தியிலேதான், ஏழாயிரம் வீடுகளை நிர்மாணித்து முஸ்லிம்கள் மீள்குடியேற்றப்பட்டனர்.

மேலும், முல்லைத்தீவில் முஸ்லிம்களை குடியேற்ற காணிகளை துப்புரவு செய்தபோது, எங்களது முயற்சிகளுக்கு குறுக்காக நின்ற சிலர், எங்களை கொன்றுவிட்டுத்தான் முஸ்லிம்களை குடியேற்ற வேண்டும் என்றனர். எங்களிடம் அதிகாரம் இல்லாத நிலையில், முஸ்லிம்களின் காணிகளை இலஞ்சம் பெற்று வேறு பலருக்கு விற்கும் நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. எனவே, எஞ்சியுள்ள வடக்கு முஸ்லிம்களை மீளக்குடியேற்ற முறையான வேலைத்திட்டத்தை கோருகின்றேன். இவ்வாறான வேலைத்திட்டத்தை முன்னெடுப்போருக்கே எதிர்வரும் தேர்தலில் எமது ஆதரவு வழங்கப்படும்.

அத்துடன், வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துக்கு ஜெனீவாவில் வழங்கப்பட்ட உறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். இவர்கள் மீள்குடியேறும் வரை எதிர்கொள்ளும் தொழில்ரீதியான சவால்களை தீர்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்" எனவும் கூறியுள்ளார்.

# "நிதி வேண்டாம் நீதியே வேண்டும்"

எஸ்.கீதபொன்கலன்



"இம்முறை வரவு-செலவுத் திட்டத்தின்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நட்டஈடாக 1,500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டமையை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்" என திருகோணமலை மாவட்டத்தின் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் சங்கத்தலைவி நாகேந்திரன் ஆஷா தெரிவித்துள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கென வரவு- செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தினரால் திருகோணமலையில் (புதன்கிழமை 15) நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பின்போதே சங்கத்தின் தலைவி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து அவர் கூறுகையில் "சர்வதேச விசாரணையே எமக்குத் தேவை. நிதி கோரி நாம் போராடவில்லை. நிதி எமக்கு தேவையில்லை, நீதியே வேண்டும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளைத் தேடி சுமார் 14 ஆண்டுகளுக்கு மேலாக நாம் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றோம்.

இலங்கை அரசின் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. சர்வதேச விசாரணை ஒன்றே தேவை எனக் கூறியே நாங்கள் தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

சர்வதேச சமூகத்தின் பார்வையில் எங்களுடைய போராட்டம் பேசு பொருளாக மாறி உள்ள நிலையில், சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் விதமாக இம்முறை வெளியிடப்பட்ட வரவுசெலவு திட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக நிதி ஒதுக்கப்பட்ட விடயம் கண்டனத்துக்கு உரியது.

யாழ்ப்பாணத்தில் இவ்வருடம் நடைபெற்ற பொங்கல் தின நிகழ்வின்போது இலங்கையில் எவரும் காணாமல் ஆக்கப்படவில்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி, இப்போது குறித்த விடயம் தொடர்பாக நிதி ஒதுக்குவதாக தெரிவித்திருக்கின்றார். அப்படியானால் எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டிருப்பதனை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா என நாம் அவரிடம் வினவுகின்றோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் தொடர்ச்சியாக எங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்காகவே போராடி வருகின்றோம். இந்நிலையில் எங்களுடைய போராட்டத்தை சிதைக்கும் வகையில் அதற்கு இழப்பீடு வழங்குவதாகக் கூறி சர்வதேச சமூகத்தை ஏமாற்றப் பார்க்கின்றனர்" என்று கூறியுள்ளார்.

# மரணச் சான்றிதழ் பெற சென்ற மகனும் மரணம்

உயிரிழந்த தந்தையின் இறுதிக் கிரியைகளுக்காக மரணச் சான்றிதழை எடுக்கச் சென்ற மகனும் விபத்தொன்றில் சிக்கி உயிரிழந்துள்ள சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

புளத்சிங்கல - பஹல நாரகல பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் இவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மோட்டார் சைக்கிளின் பின்னால் சென்ற ரந்திக பியூமல் கமகே என்ற (21) வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

இவர் உயிரிழந்த தனது தந்தையின் மரணச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக வேகமாக புலத்சிங்களவில் இருந்து ஹொரணைக்கு பயணித்துள்ளார்.

இவ்வாறு பயணித்தபோது, கீழ் நரகல பள்ளத்தாக்குக்கு அருகில் உள்ள வளைவில் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகில் உள்ள மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானதாக புலத்சிங்கள பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும் காயமடைந்து ஹொரண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புலத்சிங்கள பொலிஸ் நிலையப் பிரதான பொலிஸ் பரிசோதகர் சந்தன விதானகேவின் பணிப்புரையின் பேரில், போக்குவரத்துப் பிரிவின் நிலைய கட்டளைத் தளபதி பிரதி பொலிஸ் பரிசோதகர் செனவிரத்ன உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் குழு இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கை, கால் இல்லாத நிலையில் சடலம் மீட்பு

வவுனியா - தரணிக்குளம் கிராமத்திற்கு அருகில் உள்ள குறிசுட்டகுளம் ஏரியில் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் தொடர்பில் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. எனினும் 20-25 வயதுடைய இந்த பெண் சில நாட்களுக்கு முன்பு இறந்திருக்கலாம் என சந்தேகிக்கின்றதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். மேலும் முகம் அடையாளம் காணமுடியாத வகையில் சிதைந்துள்ளது. சிவப்பு நிற ஆடை அணிந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளதுடன்,



அழுகிய சடலத்தில் கைகள் மற்றும் ஒரு கால் இல்லாததால் உடல் உறுப்புகளை விலங்குகள் தின்றுவிட்டதா? அல்லது துண்டிக்கப்பட்டதா? என்பதில் சந்தேகம் உள்ளதாக பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.

சம்பவ இடத்தில் நீதவான் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் பிரேதப் பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வலம்புரி சங்குடன் ஒருவர் கைது

துசித குமார டி சில்வா

ஐந்து இலட்சம் ரூபாவிற்கு விற்பனை செய்வதற்காக பேருவளை பிரதேசத்திற்குக் கொண்டு வரப்பட்ட வலம்புரி சங்குடன் ஒருவர் புதன்கிழமை (14) இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

தியத்தலாவ பிரதேசத்தில் இருந்து முச்சக்கரவண்டியில் வலம்புரி சங்கை எடுத்து வந்துள்ளதாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பேரில் சந்தேக நபரை கைது செய்ததாக பேருவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 22 வயதுடைய சந்தேக நபர், சில காலம் இராணுவத்தில் கடமையாற்றியவர் எனவும் வலம்புரி சங்கின் எடை சுமார் 160 கிராம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# மாணவிகளிடம் சேஷ்டை; எதிராக சட்ட நடவடிக்கை

எம். எஸ். எம் ஹனீபா

நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவிகளுக்கு வீதிகளில் தொந்தரவு செய்பவர்களை கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக, நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் புதன்கிழமை (15) தெரிவித்துள்ளார்.

நிந்தவூர் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் குறிப்பாக பெண் பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகள், பிரத்தியேக வகுப்புகள் ஆரம்பமாகும் மற்றும் முடிவடையும் நேரங்களில் இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் மாணவிகளுக்குப் பின்னால் கூட்டமாகச் சென்று தொந்தரவு செய்வதோடு, தொலைபேசியில் புகைப்படம் எடுப்பதாகவும் பெற்றோர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பெண்கள் பாடசாலைகள் அமையப் பெற்றுள்ள பிரதேசங்களில் குறிப்பாக உள் வீதிகளில், பாடசாலை ஆரம்பிக்கும் முடியும் நேரங்களில் போக்குவரத்து பொலிஸாரை சிவில் உடையில் சேவையில் ஈடுபடுத்தப்பட வுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# விபத்தில் சிக்கிய இளைஞன் உயிரிழப்பு

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய இளைஞன், சிகிச்சை பலனின்றி (செவ்வாய்க்கிழமை 14) உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியை சேர்ந்த நிலக்சன் (வயது 18) எனும் இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 09ஆம் திகதி குறித்த இளைஞன் 14 வயது சிறுவனுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது யாழ்ப்பாணம் பிரதான வீதியில் மோட்டார் சைக்கிளிள் வேக கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் இருவரும் படுகாயமடைந்து, யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அவ்வாறு சிகிச்சை பெற்று வந்த நிலையில், இளைஞன் உயிரிழந்துள்ளார். மற்றமொரு இளைஞன் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றான்.

# 750 துப்பாக்கி ரவைகள் மீட்பு

நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம் - நெடுந்தீவில் 750 ற்கும் மேற்பட்ட துப்பாக்கி ரவைகள் செவ்வாய்க்கிழமை (14) மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய குறித்த பகுதியில் ஜே.சி.பி. இயந்திரத்தின் உதவியுடன் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் இணைந்து நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது ரி 56 துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் 750ற்கும் மேற்பட்ட ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.





# உண்மையை ஏற்றுக்கொண்டு விசாரணைக்கு அஞ்சும் அரசாங்கம்

யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டாலும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு எவ்விதமான நீதி, நியாயம் வழங்கப்படாத நிலையில், அம்மக்கள் இன்னுமே, போராட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர். உள்ளூர் விசாரணைகளில் நம்பிக்கையிழந்திருக்கும் அவர்கள் சர்வதேச விசாரணையையே கோரி நின்கின்றனர்.

இதில், பிரதானமானது காணாமலாக்கப்பட்ட தங்களுடைய உறவினர்களுக்கு என்ன? நடந்தது என்பது தொடர்பில், அரசாங்கம் அறிவிக்கவேண்டுமென கோரிநின்கின்றனர். இதற்கான பல ஆணைக்குழுக்களையும் விசாரணைக் குழுக்களையும் அரசாங்கம் அவ்வப்போது நியமித்தது.

இதற்கிடையே, இறுதி யுத்தம் நடைபெற்ற 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டுமென தென்னிலங்கையில் கோரப்பட்டது. அந்த கோரிக்கைக்கும் செவிசாய்த்த அரசாங்கம் மற்றுமொரு ஆணைக்குழுவை நியமித்தது.

அந்த ஆணைக்குழு வடக்கு, கிழக்கில் மட்டுமன்றி தென்னிலங்கையிலும் விசாரணைகளை முன்னெடுத்து. ஆணைக்குழுக்களின் முன்னிலையில் சாட்சியமளித்தே, வடக்கு, கிழக்கைச் சேர்ந்த பலரின் கண்ணீர் வற்றிவிட்டது. உறவினர்களைத் தேடியலைந்த பலரும் இடைநடுவிலேயே இறந்துவிட்டனர். வயது முதிர்ச்சி, நோய்வாய் பட்டதன் காரணமாகவே உறவினர்கள் மரணமடைந்தனர். அந்தந்த போராட்டங்களில் கலந்துகொண்டு தங்களுடைய உறவினர்களை தேடியவர்களில் ஒருசிலர் மட்டுமே எஞ்சியிருக்கின்றனர்.

இந்நிலையில்தான், 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நிதியமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் பாராளுமன்றத்தில், திங்கட்கிழமை (13) சமர்ப்பிக்கப்பட்டது.

அதில், "உள்ளக மோதலினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமல் போன 181 நபர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஏற்கெனவே இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. 2023 இறுதிக்குள் மேலும், 170 பேருக்கு இழப்பீடு வழங்கப்படவுள்ளது. சமர்ப்பிக்கப்பட்ட இழப்பீட்டுக் கோரிக்கைகளில், 6,300 நிகழ்வுகளுக்கான பூர்வாங்க பணிகள் முடிக்கப்பட்டுள்ளதுடன், ஒதுக்கீட்டுச் சட்டத்திலிருந்து ஏற்கெனவே 1,500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இழப்பீடு வழங்குவதை விரைவுபடுத்த 1,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு" செய்யப்பட்டுள்ளது என "காணாமல் போனவர்களுக்கான இழப்பீடு" எனும் தலைப்பின் கீழ், யோசனையை முன்வைத்துள்ளார்.

இந்த யோசனைக்கு வடக்கு, கிழக்கைச் சேர்ந்த காணாமல் போனவர்களை தேடும் உறவினர்கள் அமைப்பு, அரசியல்வாதிகள், சமூக அமைப்புகள் கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளன. தங்களுக்கு நிதி வேண்டாம், நீதியே வேண்டும். அதாவது சர்வதேச விசாரணையின் ஊடாக நீதி வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

காணாமல்போனவர்களுக்கு இழப்பீடு வழங்க, நிதியை ஒதுக்கியதன் ஊடாக, உள்ளக மோதல்களில் பலரும் காணாமல் போயுள்ளனர் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. அப்படியாயின் அவர்களுக்கு நடந்தது என்ன? என்பதை பகிரங்கப்படுத்தவேண்டும். அதுமட்டுமன்றி, சர்வதேச விசாரணைக்கு அஞ்சுவதால், ஏதோவொரு பாரிய உண்மையை மறைப்பதற்கே அரசாங்கம் முயல்கின்றது என்பதே உண்மை.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# தமிழ்த் தேசிய வெளியின் புலமைத்துவ வீழ்ச்சி



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ் அரசியல், சமூக மற்றும் புலமைத்துவப் பரப்பு கடந்த சில ஆண்டுகளாக எந்தவிதமான நம்பிக்கையான முயற்சிகளையோ மாற்றங்களையோ காட்டாமல் வெறுமையால் நிரம்பியிருக்கின்றது. முள்ளிவாய்க்கால் முடிவுகளில் இருந்து சற்று வேகமாகவே மீண்டெழுவது தொடர்பிலான ஆக்ரோசத்தை தமிழ்ச் சமூகம் வெளிக்காட்டினாலும், அதனை நெறிப்படுத்தி முன்னோக்கி நகர்த்த வேண்டிய அரசியல் தரப்புக்களும், புலமைத்துவ பீடங்களும் ஆக்கபூர்வமாக எதனையும் மேற்கொள்ளவில்லை. அதனால், தமிழ்ச் சமூகம் பிளவுண்டது மாத்திரமன்றி, தவறான பக்கங்களை நோக்கிய விரைவாக ஓடத் தொடங்கியிருக்கின்றது.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த தரப்பாக தமிழ் மக்கள் சந்தித்த பின்னடைவுகள் பாரியளவானவை. அந்தப் பின்னடைவில் இருந்து மீண்டெழுவது என்பது அவ்வளவு இலகுவான ஒன்றல்ல. ஆனால், அதற்கான முயற்சிகளில் உண்மையான அர்ப்பணிப்பும் உழைப்பும் அவசியமானது. அதனை வழங்குவதற்கு தமிழ் மக்கள் எப்போதுமே தயாராகவே இருந்திருக்கிறார்கள். ஆனால், அவர்களை ஒருங்கிணைந்து வழிப்படுத்த வேண்டிய பொறுப்பைக் கொண்டிருக்கும் அரசியல் தரப்பும், புலமைத்துவ பீடங்களும் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்குவதற்கு பதிலாக அதிக தருணங்களில் மக்களை இன்னும் பின்னுக்கு இழுத்துவிடும் வேலைகளை மேற்கொள்கின்றது. அதிலும், அதீத உணர்ச்சியூட்டல்கள் அல்லது உணர்ச்சிவசப்படுதல் என்ற புள்ளிகளில் நின்று விடயங்களை கையாள இந்த இரு தரப்புக்களும் முயல்வதை தொடர்ச்சியாக காணக்கூடியதாக இருக்கின்றது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறையில் சட்டத்தரணி சுவஸ்திகா அருளிங்கம் நிகழ்த்தவிருந்த விரிவுரையொன்று பல்கலைக்கழக நிர்வாகத்தினால் தடுத்து நிறுத்தப்பட்டது. சுவஸ்திகாவை விசேட விரிவுரை ஒன்றை நிகழ்த்த யாழ். பல்கலைக்கழகத்தின் சட்டத்துறையே அழைத்திருந்தது. அந்த விரிவுரை இடம்பெறுவதற்கு சில நாட்களுக்கு முன்னர், சுவஸ்திகா கொழும்பில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளை பாசிசவாதிகள் என குறிப்பிட்டிருந்தார். இந்த விடயம் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் பேசுபொருளானது. இந்தப் பின்னணியிலேயே, யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் சுவஸ்திகாவின் விரிவுரையை தடுத்து நிறுத்தியிருக்கின்றது. அவரின் விரிவுரை இடம்பெறுமானால் மாணவர்கள் போராட்டத்தை முன்னெடுப்பார்கள், அதனால் பல்கலைக்கழகம் அசௌகரியங்களைச் சந்திக்கும் என்ற ரீதியில் அந்த விரிவுரை தடுத்து நிறுத்தப்படுவதற்கான காரணமாக சட்டத்துறை உள்ளடங்கிய கலைப்பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம் உள்ளிட்ட நிர்வாகத் தரப்பு வழங்கியிருக்கின்றது.

தமிழ்த் தேசிய அரசியலில் எழுச்சியில் யாழ். பல்கலைக்கழகத்தின் வகிபாகம் அதிகமானது. ஆனால், தமிழ்த் தேசிய அரசியல் அஹிம்சை வழியில் இருந்து ஆயுதப் போராட்டத்தை நோக்கி நகர்ந்த போது, யாழ். பல்கலைக்கழகமும் அதனை விமர்சனங்கள் இன்றி ஆதரிப்பதற்கான கட்டத்தை நோக்கி பெரும்பாலும் நகரத் தொடங்கியது. மாற்றுக் கருத்துக்கள் வெளிவருவதற்கான சூழல் ஒரு கட்டத்தில் இல்லாமற்போனது. தமிழ் மக்களின் புலமைப்பீடங்களில் பிரதான பீடமான யாழ். பல்கலைக்கழகம் மாற்றுக் கருத்துக்களுக்கான வெளியை நிராகரிக்கத் தொடங்கிய புள்ளி, தமிழ் அரசியல் தோல்விகளுக்கும் ஒரு காரணமாகத் தோன்றியது.

ஏனெனில், போராடும் சமூகத்துக்கும் மக்களின் ஒருங்கிணைவு என்பது அதிமுக்கியமானது. அதேபோல், கேள்விகளுக்கு அப்பால் மக்கள் ஒரு புள்ளியில் ஒருங்கிணையும் போது, அதனைச் சீர்ப்படுத்துவதற்கு புலமைத்துவ தரப்புக்களின் கேள்விகள் அவசியமானவை. அதுதான், மக்களை ஒருங்கிணைக்கும் தரப்புக்கள் தவறிழைக்கும் பட்சத்தில் அந்தத் தரப்புக்களை திருத்துவதற்கு உதவும். ஆனால், தமிழ்ச் சூழலில் அந்த வாய்ப்பு என்பது பெரிதாக நிகழவேயில்லை.

இந்தப் பத்தியாளரை நோக்கி, வெளிநாட்டு ஆய்வு மாணவர் ஒருவர், "ஈழத்து (குறிப்பாக, வடக்கு - கிழக்கு) புலமைத்துவ வெளி என்பது ஏன் தொடர்ந்தும் வெற்றிடமாக இருக்கின்றது. சொல்லிக் கொள்ளும் அளவுக்கான புலமைத்துவ ஆய்வுக்கட்டுரைகளையோ, மக்களை நேர் வழிப்படுத்தும் ஆக்கங்களையோ காணக் கிடைக்கவில்லை. அதுக்கு காரணம் என்ன?" என்றார். இந்தக் கேள்வியை எதிர்கொள்ள வேண்டியது குறித்து இந்தப் பத்தியாளர் மனதளவில் பெரும் வருத்தமடைந்தார். ஆனால், அந்தக் கேள்வியில் இருக்கும் உண்மைத்தன்மையைக் குறித்து விவாதிக்க வேண்டிய அவசியம் தவிர்க்க முடியாதது. ஆயுதப் போராட்டத்தின் போக்கு எதனை நோக்கியிருக்கின்றது என்பது குறித்து உணர்ந்து கொண்டிருந்தாலும், அதனைக் குறித்து வெளிப்படையாக உரையாடுவதற்குத் தயாராக இருக்கவில்லை.

அதிக நேரங்களில் ஆயுதப் போராட்டத்தின் போக்கினை மெச்சும் கருத்துருவாக்கங்களை மாத்திரமே பேருரைகளாக, ஆய்வுக் கட்டுரைகளாக, அரசியல் பத்திகளாக தமிழ்ச் சூழல் நிகழ்த்தியும் எழுதியும் வந்திருக்கின்றது. அதனால், தவறுகளை களைவதற்காக புள்ளிகள் என்பவனவே இல்லாமல் போனது. அதுவே, ஒருகட்டத்தில் முள்ளிவாய்க்கால் முடிவுகளை நோக்கித் தள்ளியது. அதுவரையும், தமிழ்ச் சூழலில் புலமையாளர்களாகவும் ஆய்வாளர்களாகவும் காட்டிக் கொண்டவர்கள் எல்லாமும் அமைதியாகிவிட்டார்கள். ஏனெனில், அவர்கள் ஆயுதப் போராட்ட காலத்தில் பேசியதும் எழுதியதும் அதிகமானவை பொய்த்துப் போய்விட்டன. அதனைத் தாண்டி இன்றைக்கு அவர்களினால் பேசவும் எழுதவும் முடியாது. அப்படி எழுதினாலும் அதனை யாரும் கவனத்தில் எடுக்கவே மாட்டார்கள். ஏனெனில், எப்போதுமே தோற்றுப்போன கருத்தியல்களின் நீட்சியை மக்கள் சுமக்க விரும்ப மாட்டார்கள்.

அதற்கு இன்றும் வாழும் உதாரணங்களா பல புலமையாளர்களை ஆய்வாளர்களை தமிழ்ச் சூழலில் காணலாம். அவர்களிடம் குற்றவுணர்ச்சியும் ஏமாற்றமுமே அதிகம் மிஞ்சியிருக்கின்றது. ஏனெனில், கடந்த காலத்தில் அவர்களில் பெரும்பான்மையான தரப்புக்கள் மாற்றுக் கருத்துக்களை நிராகரித்து நின்ற தரப்பினராகும். அவ்வாறானவர்கள் இன்றைக்கு மாற்றுக் கருத்துக்களோடு வரும்போது, அவை இலகுவாக புறந்தள்ளப்பட்டுவிடும்.

யாழ். பல்கலைக்கழகம் இன்றைக்கும் ஒற்றைப் புள்ளியில் நின்று மாத்திரமே சிந்திக்கத் தலைப்படுகின்றது. மாணவர்களிடம் கருத்துருவாக்கங்களையும் விவாதங்களையும் தோற்றுவித்து சமூகத்துக்கு பங்களிக்க வேண்டிய புலமைத்துவ பீடமொன்று தொடர்ச்சியாக ஒற்றைப் புள்ளியில் (அல்லது ஏக வாதத்தில்) நின்று செயற்பட முனைவது என்பது அபத்தமானது. சுவஸ்திகாவின் விரிவுரையை எதிர்கொண்டு கருத்தியல் விவாதங்களை செய்யக்கூடிய மாணவர்களை உருவாக்குவதுதான் புலமைப்பீடத்தின் வேலை. மாறாக, எதிர்க்கருத்து ஒன்று வருகின்றது என்றால் அதனை எதிர்கொள்வதற்குப் பதிலாக வகுப்பு புறக்கணிப்பு, போராட்டங்கள் என்று இறங்குவது என்பது ஆரோக்கிய சமூகத்துக்கான அடையாளம் இல்லை. ஏனெனில், இவ்வாறான நிலை, கருத்தியலாக மோதும் சமூகத்தை இல்லாதொழித்துவிடும். சுவஸ்திகாவின் விரிவுரையைத் தடுத்து நிறுத்தியமையைக் யாழ். பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கம் கண்டித்து அறிக்கையொன்றை வெளியிட்டது. அறிக்கை வெளியாகி 24 மணிநேரங்களுக்குள்ளேயே மாணவர்களின் எதிர்ப்பினால் அந்த அறிக்கை மீளப்பெறப்பட்டது. புலமைப்பீடமொன்று குறிப்பாக, ஆசிரியர்கள் அனைத்து விதமான கருத்துக்களையும் விவாதிப்பதற்கான களங்களை உருவாக்கிக் கொடுக்கும் தரப்பினராக இருக்க வேண்டும். ஆனால், யாழ். பல்கலைக்கழகத்தில் இருக்கும் ஆசிரியர்கள், மாணவர்களின் சிறு எதிர்ப்பைக் கூட சமாளிக்க முடியாமல், மிக மோசமான முடிவுகளை எடுத்து நடந்து கொண்டிருக்கிறார்கள்.

பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் சுமுகமான இயக்கத்துக்கு ஆசிரியர்களும், நிர்வாகமும் பொறுப்புக் கூற வேண்டியது அவசியமானது. அதனால் புலமைத்துவ வெளியை நிராகரிப்பது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. சுவஸ்திகாவின் விரிவுரையை தடுத்து நிறுத்தியுள்ளதன் மூலம், தமிழ்த் தேசிய அரசியல், சமூக, புலமைத்துவப் பரப்பு தொடர்பில் ஏனைய தரப்புக்கள் தொடர்ச்சியாக முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்வது போன்றே அமைகின்றது. குறிப்பாக, கருத்துக்களோடு மோதுவதற்கு தமிழ்த் தேசிய அரசியல் தயாரில்லை என்று கொழும்பு மைய தாராளவாதிகளும், புதிய இடதுசாரிக் குழுக்களும் முயன்று வருகின்றன. அப்படியான நிலையில், தமிழ்த் தேசிய வெளி தன்னுடைய ஆளுமையை வெளிப்படுத்த வேண்டும். அதனைவிடுத்து, தங்களின் தோல்விக்கான வெளிகளை திறந்துவிடக் கூடாது. யாழ். பல்கலைக்கழகத்தில் நடந்தது மாதிரியான விடயங்கள் மீண்டும் மீண்டும் நிகழாமல், ஆளுமையுள்ள பரப்பாக தமிழ்த் தேசிய அரசியல், சமூக, புலமைத்துவ வெளி தன்னைக் கட்டமைத்துக் கொள்ள வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

சிந்தனை ஓட்டங்கள் விஸ்தீரணம் அடையும்போது, அதனோடு இணைந்தவர்கள் பரோபகாரிகளாகி விடுகின்றனர். இது இயல்பான நிலைதான்.

நற்சிந்தனையுடன் தம்மைச் சுற்றியிருப்பவர்களின் நலன்பற்றி, அக்கறை கொண்டால், அதுவே அவர்களின் பரந்த நற்பண்பைத் தானாகவே மாற்றிவிடுகின்றது.

எவராலுமே சிறப்பான வாழ்வை உருவாக்க முடியும். ஆனால், நடைமுறை வாழ்வில் பலவித பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. எவருமே துன்பங்களை விரும்புவதில்லை. எனினும், இன்பங்களும் துன்பங்களும் வந்தபோன வண்ணமே உள்ளன.

வாழ்க்கை என்பது அற்புதமான தேன்கூடு. பல்லாயிரம் தேனீக்கள், பலகோடி மலர்களில் இருந்து, தேனைச் சேகரிக்கின்றன. உழைப்பின் முழு வடிவத்தையும் இந்தச் செயற்பாடு உருவகிக்கின்றது. தேனீக்களின் இந்தத் தொண்டுக்கு, நிகர் பிறிதொன்றுமில்லை.

இதேபோலவே, மனித இனம், தன்னை வளப்படுத்தப் போராடிக்கொண்டே இருக்கின்றது. இந்தப் போராட்டத்தை, ஆதரிக்க வேண்டியது நம்மவர்களின் தலையாய கடமையாகும்.

எனவே, சிந்தனையாளர்கள் மனித இனத்தின் மீது அக்கறை செலுத்துவதும், அறிவுரை சொல்வதும் அவர்களது கடமையாகிவிட்டன. மக்களின் பிரதிநிதிகள் இவர்களாவர்.

நன்றி -பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வந்து விட்டோம் போக முடியவில்லை

தீபாவளி பண்டிகையை கொண்டாடுவதற்காக, சொந்த ஊர்களுக்கு சென்றவர்களை மீண்டும் பணியிடங்களுக்கு அழைத்து செல்ல போதிய பஸ்கள் இல்லை என குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

தீபாவளி பண்டிகைக்காக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வேலை செய்து சொந்த ஊர்களுக்கு வந்துள்ள மக்களுக்கு ஹட்டன் பஸ் நிலையத்தில் இருந்து பணியிடங்களுக்குச் செல்வதற்கு போதிய பஸ்கள் இல்லை என பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.


ஹட்டன் பஸ் நிலையத்தில் இருந்து கொழும்புக்கு தினசரி இயக்கப்படும் பஸ்கள் மாத்திரமே இயங்குவதாகவும் ஆனால், அந்த பஸ்கள் போதுமானதாக இல்லை எனவும் பயணிகள் கூறியுள்ளனர்.

அவர்கள் புதன்கிழமை (15) வேலை செய்யும் இடங்களுக்குச் சமூகமளிக்க வேண்டியிருந்தாலும், ஹட்டன் பஸ் நிலையத்தில் இருந்து கொழும்புக்குச் செல்வதற்கு பல தனியார் மற்றும் அரச பஸ்கள் இணைக்கப்பட்டுள்ள போதிலும், சேர்க்கப்பட்ட பஸ்கள் 15ஆம் திகதி வரை இயங்கும்.

கொழும்பிற்கு செல்வதற்காக ஹட்டன் பஸ் நிலையத்திற்கு அதிகளவான மக்கள் வருகின்றனர். அது போதாது என ஹட்டன் பஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ரஞ்சித் ராஜபக்ஷ

# சீதனமும் வாழ்வும்



சி.கஜானா
குரு/நிக/அல்/இல்மியா மகா வித்தியாலயம்
(ஆசிரியர்)



மழையில் நனைந்த ஒவியமவள், நேரம் காலை 6:45 மணி. பூமரங்கள் பூச்சொரிய தேனிக்கள் தேனருந்த குருவிகள் இசை பாட ஊரின் நடுவில் ஸ்ரீ வீரகாளியம்மன் கோயில் மணி 'டாங் டாங்...' என ஒலித்துக் கொண்டிருந்தது. பூமரங்கள் நிறைந்த அழகுமிக்க பூஞ்சோலைக் கிராமத்தில் கொண்ட ஆசையினால் போலும் கதிரவன் தன் பொற்கரங்களை ஊரினுள் செலுத்திக் கொண்டிருந்தான்

றிங் றிங்....

மீனாட்சி போன் அடிக்குது போய் ஒருக்கா கதை என்ற படி கண்ணும் கருத்துமாக பேப்பர் படித்துக் கொண்டிருந்தார் கனகசுந்தரம். அடுப்படியில் நின்றபடி மீனாட்சி கணவனின் சொல்லுக்கு கட்டுப்பட்டவளாய் வந்து போனை எடுத்தாள்.

ஹலோ யார் பேசுறியள்? ஹலோ

பதில் எதுவும் கிடைக்கவில்லை. ஆகையால் மீனாட்சி போனை வைக்க முற்பட்ட போது தழுதழுத்த குரல் ஒன்று கேட்டது. அவள் மறுபடி ஹலோ சொல்ல முன்பே அ...ம்..மா... என்னால இஞ்ச இந்த ஆளோட வாழேலாது நா..ன் சா..கி..ற..ன் அப்பாவையும் தம்பியையும் கவனமா பாத்து கொள்ளுங்கோ'

அந்த குரலை அதுவும் அப்படியான ஒரு செய்தியை கேட்டதும் அவள் அதிர்ந்து போய் விட்டாள். அழுகை இருபுறமும் தொடர்ந்தது.

மீனாட்சி காதில் தான் போன் இருந்தது. மீண்டும் இன்னொரு குரல் வந்தது.

'அடியேய் என்னையாடி எதிர்த்துப் பேசுற. உன்னை சாவடிக்காம விடமாட்டன். எங்கடி இருக்கிறாய் தைரியமிருந்தா வாடி முன்னால்'

கோவாவேசத்துடன் ஒரு ஆணின் குரல் கேட்டது.

> **திருமணமே வேண்டாம் என்று முடிவு செய்து வாழ்ந்தாள் ராதிகா. சில மாதங்களில் அந்த முடிவு சுக்கு நூறாக உடைந்தது. அதற்கு காரணம் கனடாவில் வசிக்கும் மாதவன்.**

மீண்டும் ஆணின் குரல் தொடர்ந்தது. 'ஒரு சல்லிக் காசு கூட உன்ர கொப்பன் எனக்குத் தரேல.. சீதனமில்லாம உன்ன கட்டி, கஞ்சி ஊத்துறன் எண்டு சந்தோசப்படாம என்ர பேர்சனல் விசயத்தில நீ எதுக்கடி மூக்க நுழைக்கிறாய்... வாடி வாடி வெளியில்...

இதையெல்லாம் கேட்டு நிலை குலைந்த மீனாட்சி கதிரையில் சாய்ந்தாள். சில நிமிடத்தின் பின் போனைப் பார்த்தாள். போன் கட் ஆகி விட்டது. அவள் என்ன செய்வது? சிறிது நேரம் கழித்து தான் பேசியது தன் மகள் ராதிகா என்றும் மாதவன் என்றும் புரிந்தது.

மீனாட்சி சரிந்து போய் இருப்பதைக் கண்ட கனகசுந்தரம் நீர் தெளித்து எழுப்பி என்னவென்று கேட்டார்.

ஓ...வென கதறியழுதாள் மீனாட்சி..

விசயத்தை மீனாட்சி கூறியதும் கனகு அப்படியே இடிந்து போய் உட்கார்ந்து விட்டார். அவர் நினைவுகள் சுழன்றன.

ஆம் மீனாட்சி கனகசுந்தரத்தை 1975 கரம் பிடித்தாள். கனகு ஒரு விவசாயி. ஆயினும் அவர்களின் வாழ்வு மிகவும் எளிமையாகவும் சந்தோசமாகவும் நகன்றது. அவர்களின் இல்லறத்தின் பயனாக பிறந்தவள் தான் ராதிகா. அழகும் குறும்பும் அவளிடம் நிறைந்தே இருந்தன. காசுக்கு குறைவிருந்தாலும் பாசத்திற்கு குறைவில்லாமல் வாழ்ந்தவர்கள் இவர்கள்.

> **முன் பின் அறியாத ஒருவனுக்கு ராதிகாவை திருமணம் செய்ய பெற்றோர் முதலில் மறுத்தனர். எனினும் மாதவன் தனக்கு சீதனம் வேண்டாம் என்று கூறியதும் அவர்கள் சம்மதம் கூறிவிட்டனர்**

ஆனால், காலத்திற்கு நடந்து பழக்கமில்லை தானே... ஒடித் தான் அதற்கு பழக்கம். ஆகையால் நாட்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாகி வேகமாக உருண்டோடின. ராதிகா பருவ மங்கை ஆனாள்.

அவளுக்கு வரன் பார்க்கும் செயல் மிக வேகமாக தொடங்கியது. தொடங்கி என்ன பயன். அவள் போட்டோவைப் பார்ததும் ஓ,கே சம்மதம் என்று சொல்லி பெண் வீட்டாரினைப் பார்க்க வருவார்கள். 'சீதனம்' என்ற சொல் வந்ததும் மாப்பிளை வீட்டார் பஞ்சாய் பறந்து விடுவார். இது ராதிகாவின் மனதை வேதனைக்கு உள்ளாக்கியது. ஆண்கள் ரசிக்கும் பொருட்களா பெண்கள் என்று மனம் புழுங்கினாள்.

திருமணமே வேண்டாம் என்று முடிவு செய்து வாழ்ந்தாள். சில மாதங்களில் அந்த முடிவு சுக்கு நூறாக உடைந்தது. அதற்கு காரணம் மாதவன். மாதவன் கனடாவில் வசிக்கும் பொறியியலாளன். சுற்றுலா காரணமாக இக் கிராமத்திற்கு வந்திருந்தான். எதிர்பாரா விதமாக ராதிகாவைக் கண்டான். அவளும் கண்டாள். கண்டதும் காதல் என்பார்கள் அதுதான் இது. இருவர் மனதும் சங்கமித்துக் கொண்டன. மறுநாளே ராதிகா வீட்டில் சம்மதம் பெற்று விட்டான். யார் அவன் என்று முன் பின் அறியாத ஒருவனுக்கு ராதிகாவை திருமணம் செய்ய பெற்றோர் முதலில் மறுத்தனர். எனினும் மாதவன் தனக்கு சீதனம் வேண்டாம் என்று கூறியதும் அவர்கள் சம்மதம் கூறிவிட்டனர்.

சில நாட்களில் மாதவன் ராதிகாவைக் கூட்டிக்கொண்டு கனடாக்குச் சென்றான். அவர்களின் வாழ்வு மிகவும் சந்தோசமாக போய்க் கொண்டு இருந்தது. திடீரென ஒருநாள் மாதவன் நள்ளிரவில் குடித்துவிட்டு வந்தான்.

அவள் கோபப்படவில்லை. அவனை அன்புடன் வரவேற்று நீராட்டி தூங்க வைத்தாள். ஆனால், அது நீடிக்கவில்லை. ராதிகா மாதவனின் செயற்பாட்டில் பல மாற்றங்களைக் கண்டாள். கனடாவில் ராதிகாவிற்கு மாதவனைத் தவிர யாரையும் தெரியாது. ஆங்கில மொழியும் தெரியாது. அவள் அவனைத் திருத்த முயன்றாள். நிலமை மோசமாகிக்கொண்டு போனது.

ஒரு நாள் நள்ளிரவு வேளை க கனடாவில் மழை பலமாக பெய்துகொண்டு இருந்தது.

டக்..டக்..டக்., கதவ திறடி. மாதவன் குரல் கொடுத்தான். கதவை திறக்க ஓடியவள் திறந்ததும் அதிர்ச்சியடைந்தாள். அங்கே மாதவன் போதையில் தள்ளாடியபடி நின்று கொண்டிருந்தான். பின்னால் இன்னொரு பெண் நின்று கொண்டிருந்தாள். ஏன்? என்று ராதிகா திருப்பி கேள்வி கேட்டதுதான் தாமதம். பளார் பளார்... என ராதிகாவிற்கு அடி விழுந்தது. அவள் சுதாரிக்க முன்னமே அடுத்தடுத்து பல அடிகள் விழுந்து கொண்டன. மாதவனுடன் வந்த பெண் இதையெல்லாம் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தாள். கோபம், போதை இரண்டும் மிகுதியாய் போகக் கையில் இருந்த போத்தலால் ராதிகாவின் தலையில் அடித்தான் மாதவன்.

> **ராதிகா சப்பாத்துக் கால்களினால் உதைகளைத் தாங்கிய படி இரத்த நாளங்கள் அறுந்து இரத்த வெள்ளத்தில் உயிரின்றி நிலத்தில் கிடந்தான் மழையில் நனைந்த ஒவியமாய்...**

முகமெல்லாம் இரத்தம் வழிந்து கொண்டிருக்க மாதவனிடம் ராதிகா கேட்டாள். "நா...ன் என்ன பிழை செய்தனா..ன்" என்று. "நீ சீதனம் இல்லாமல் என்ன கல்யாணம் செய்தது தான் பிழை" என்று கூறிவிட்டு பதிலுக்கு காத்திராமல் கதவுக்கு வெளியே அந்தக் கொட்டும் மழையில் தள்ளி விட்டான் மாதவன். கொஞ்சம் கூட இரக்கமின்றி கதவைப் பூட்டி விட்டு காரிலேறி இருவரும் சென்று விட்டனர்.

ராதிகா சப்பாத்துக் கால்களினால் உதைகளைத் தாங்கிய படி இரத்த நாளங்கள் அறுந்து இரத்த வெள்ளத்தில் உயிரின்றி நிலத்தில் கிடந்தான் மழையில் நனைந்த ஒவியமாய்.

முற்றும்.....

சீதனக் கொடுமையால் அல்லலுற்று மரணமடையும் ராதிகா போன்ற பெண்களுக்காய்

# டெங்கோ.... டிங்கோ...



ஷெல்லிதாசன
திருகோணமலை

'இஞ்சேரப்பா...இப்ப ரண்டு மூண்டு நாளா ஒரே காய்ச்சல் குணமாயிருக்கு. தலைக்குள்ளை வலிக்கிற மாதிரியுமிருக்கு. மூட்டெல்லாம் நோகுதப்பா'

'உங்கை ஊருலகெல்லாம் டெங்கு பரவுதாம். எங்கடை பாக்கியம் மாமி வீட்டுப்பக்கம் ஆருக்கோ டெங்கு வந்து ஆஸ்பத்திரியிலை விட்டிருக்காம். உந்த சனிற்றறி இஞ்சுப்பெற்றர்மார் அங்கை வந்து அவங்கள் இருக்கிற இடத்தை டெங்கு பரவிற இடமாய் அறிவிச்சுப் போட்டாங்களாம்'

'உண்மையே அப்பா... எனக்கும் பயமாயிருக்கு. குடிநீர் ஏதாவது அவிச்சுத்தந்தா குடிச்சுப்போட்டுக் கிடக்கலாம்'

'உந்தக் கதையளை விட்டிட்டு பரஞ்சோதி மருந்துக்கடையிலை டெங்குக் குடிநீர்சரக்கு விக்கிறாங்களாம். பாக்கியம்மா, தாங்களும் அதைத்தானாம் வாங்கிக் குடிச்சவை. நல்ல மருந்தாம்.'

'இந்த நேரத்திலை சொல்லுறீர். இப்ப இரவு ஏழுமணியாகுது. கடைக்கு ரவுணுக்கெல்லே போகவேணும். இந்தக் காச்சலிலை என்னாலை மூண்டுகட்டை சயிக்கில்லை போகேலாது . ஓட்டோக்காரங்கள் போய்வர ஐநூறு ரூபா கேப்பாங்கள்.'

'சரியப்பா இஞ்சிபோட்டு தேத்தண்ணி தாறன் குடிச்சிட்டுப் படுங்கோ. விடிய எழும்பி நேரத்தோடை போய் குடிநீர் சரக்கை வாங்கி வந்தீங்களெண்டா அவிச்சுத்தாறன். இப்ப யோசியாமல் படுங்கோ'

மனைவியின் சொல்லைக் கேட்ட மற்ஸ் மாஸ்ரர் மகேஸ்வரன் மனைவி தந்த இஞ்சித்தேத்தண்ணியைப் பருகிவிட்டு, காலையில் எப்படியும் மருந்துக்கடைக்குப்போய் டெங்குக் குடிநீர்சரக்கு வாங்கி அவிச்சுக் குடிக்கவேண்டுமென்ற நினைப்பில் தூக்கத்துக்குப் போனார்.

அடுத்தநாள் பரபரப்பாய் எழுந்த மாஸ்ரர் கடை ஒன்பதுக்குப் பிறகுதான் திறப்பார்களென்பதால் காலை உணவை முடித்து வெளிக்கிட்டு தனது ஈருளியை எடுத்துக்கொண்டு மருந்துக்கடையை நோக்கி விரைந்தார். என்ன ஆச்சரியம். அந்த நேரமே மருந்துக்கடை மக்களால் நிரம்பிவழிந்தது. நாட்டில் மதுக் கடையிலும், மருந்துக்கடையிலுந்தான் இரவுபகல் வியாபாரம் களைகட்டுகிறதென்பதை மாஸ்ரர் அறியாதவரில்லை.

மாஸ்ரரும் அந்தக் கூட்டத்தில் பொறுமை காத்து ஒருவாறு மருந்துக்கடைக்காரரை அணுகி 'தம்பி எனக்கு டெங்குக் குடிநீர் ஒரு பக்கற் தாங்கோ' எனக்கூற, கடைக்காரர் ' ஐயாவுக்கு டிங்குக்குடிநீர் பக்கற்கொடுங்கோ' என அங்குநின்ற பையனிடம் சொல்ல அவனும் மாஸ்ரரிடம் அதை எடுத்துக்கொடுக்க அதற்கான பணத்தை கொடுத்துவிட்டு அவர் வீடுவந்து சேர்ந்தார். கணவன் வாங்கிவந்த டெங்கு குடிநீர் பக்கற்றை எடுத்துப்பார்த்த இல்லாள் மகேஸ்வரி, 'என்னப்பா இது. டெங்குக் குடிநீர் வாங்கச்சொல்ல டிங்குக் குடிநீர் வாங்கி வந்திருக்கிறியள் என்றாள்.'

'உனக்கப்பா ஒரு கோதாரியும் விளங்காது. உந்தக் குடிநீர் சரக்கு எங்கை தயாரிக்கிறவங்கள் எண்டுபாரப்பா' 'என்னப்பா... ஏதோ சியாம்பளண்டுவ எண்டு போட்டிருக்காங்கள்' இப்ப விளங்குதே முழுச் சிங்கள ஊர் அங்கை அச்சுக்கூடத்திலை டெங்குவை டிங்கு எண்டு அச்சடிச்சிருக்கிறாங்கள். ஏன் எங்கடை ஆக்கள் கல்வித்திணைக்களம் எண்டு அடிக்கிறதை கலவித்திணைக்களமெண்டும், முன்னாள் அதிபர் எண்டதுக்குப் பதிலாக முன்னால் அதிபர் எண்டும் அச்சடிக்கேக்கை தமிழே தெரியாதவங்கள் டெங்குவை டிங்கு எண்டு அடிச்சிட்டாங்கள். சரி உந்த ஆராச்சியளை விட்டிட்டு சட்டுப் புட்டெண்டு அவியுமப்பா. மூண்டு நாளைக்கேத்த மருந்திருக்குது எண்டு போட்டிருக்கிறாங்கள். மூண்டுநாளும் மூண்டு வேளையும் குடிக்கவேணுமாம்'

டெங்குக் குடிநீரை மாஸ்ரரும் நாள் தவறாது குடித்துவந்தார். முதல்நாள் அவர் மூன்று வேளையும் மருந்தைப் பருகியதும் அவரது உடலில் ஏதோ புது மாற்றம் ஏற்படுவதாக மாஸரர் உணர்ந்தார். அவரது அங்கங்களில் ஒருமாற்றம். ஐம்பது வயதைத்தாண்டிய அவரது உருவத்தில் ஒரு தோற்றப் பொலிவு. அடுத்தநாள் மருந்தை குடித்ததும் அரைக்கரைவாசி நரைத்த அவரது தலைமயிர், மீசையெல்லாம் கருகரு வென கறுத்து இருபத்தைந்து வயதுடையவராக அவர் மாறியதை ஆச்சரியமாக நோக்கிய அவர், மூன்றாம் நாள் மருந்துடன் முகத்தின் வயோதிபமெல்லாம் மறைந்து ஒரு வாலிபன்போலவும் தோற்றம் பெற்றார்.

முன்பெல்லாம் இவரிடம் ரியூசன் வகுப்புக்கு வந்த பெண்கள் இவரது முதுமைத்தோற்றம் பிடிக்காத காரணத்தால் இவரிடம் ரியூசன் படிப்பதைவிட்டு விலகி இளைய ஆசிரியர்களை நாடிச் சென்றுவிட்டது மாஸ்ரருக்குப் பெரிய கவலையாக இருந்து வந்தது. மாஸ்ரர் இந்தக் குடிநீரைப் பருகியபின் ஒரு அழகிய இளைஞனாக மாறிவிட்டதால் இவரை விட்டு விலகிய இளம் பெண்கள் பலர் மீண்டும் இவரை நாடி மற்ஸ் படிப்பதில் ஆர்வம் காட்டினர். இளம் பெண்கள் வருவதை அறிந்த இளம் மாணவர்களும் இந்தச்சாட்டில் மாஸ்ரரிடம் பாடம் கேட்க ஆவலாக வந்து குவிந்தது மாஸ்ரருக்கு வலு குதூகலமாகப் போய்விட்டது.

மாஸ்ரரும் தன்னிடம் படிக்கவரும் இளம் பெண்களுடன் கலகலப்பாய் சிரித்துசிரித்துப் பேசுவதும் அவர்களும் சேர்...சேர்... என அவருடன் கொஞ்சிக் குலாவுவதையும் பார்த்த மாஸ்ரரின் மனைவி மகேஸ்வரிக்கு மிகக் கடுப்பாக இருந்தது. இதனால் அவர்களுக்கிடையே பலத்த மோதல்களும் வெடித்தன. ஒருநாள் மாஸ்ரர் சில மாணவிகளுக்கு பாடம் சொல்லிக் கொடுத்து முடிந்த வேளை அந்த மாணவிகள் 'சேர் உங்களோடை ஒரு செல்பி எடுக்க எங்களுக்கு ஆசையாயிருக்கு கிட்டவாங்கோ சேர்' என அவரை ஆசையாக அழைத்தனர். மாஸ்ரரும் அந்த இளம் பெண்களுக்கருகே நின்று படமெடுக்க சிரித்தபடி செல்லவும், அதனை அவதானித்த, குசினிக்கு வெளிப்புறத்தே விறகடுப்பில் மா வறுத்துக்கொண்டிருந்த மனையாளான மகேஸ்வரிக்கு கோபம் பொங்கி வர தனது கையிலிருந்த மா வறுக்கும் பெரிய அகப்பையுடன் மாஸ்ரருக்கருகே பாய்ந்துவந்து அவரது தலையிலே பலமாக டொங்கென ஒரு போடுபோட்டார்.

எதிர்பாரத அடியின் வலிதாங்க முடியாத மாஸ்ரர், 'ஐயோ... ஐயோ அடிக்காதை.. அடிக்காதை' என பலமாகக் கூச்சல் போட்டார். விடிகாலை நித்திரையில் படுக்கையில் படுத்தபடி மனிசன் பலமாக கத்தியதைக் கேட்டு அவரது மனைவி மகேஸ்வரி, மாஸ்ரரின் அருகே ஓடி வந்து 'என்னப்பா... கனவு கண்டனீங்களே...ஆர் உங்களுக்கு அடிச்சவங்கள்... எழும்புங்கோ...எழும்புங்கோ' என மாஸ்ரரை தட்டி எழுப்பினாள். திடுக்குற்று எழுந்த மாஸ்ரர் கண்ணைக் கசக்கியபடி கண்விழித்து 'அட நான் இவ்வளவு நேரமும் கண்டது கனவே. என்ன ஒரு அருமையான கனவு. எல்லாம் போச்சு' என உள்ளூரக் கவலைப்பட்டவராய் முகங்கை கால் கழுவி மாற்றுடை தரித்து தனது ஈருளியை எடுத்துக்கொண்டு மருந்துக் கடைக்குப் போனவர், தான் கனவிலே பருகிய டிங்கு குடிநீர் பொதி சிலவேளைகளில் கிடைக்கலாமென்ற ஒரு நப்பாசையில் 'முதலாளி எனக்கொரு டிங்கு குடிநீர் பக்கற் குடுங்கோ' என்றார். 'ஐயா டிங்கு குடிநீர் எண்ட ஒண்டு எங்களிட்டை இல்லை. டெங்கு குடிநீர் பக்கற்தானையா இருக்கு' என மாஸ்ரரைப் பார்த்துக் கிண்டல் செய்தார்.



காசா

# பணயக் கைதிகளை விடுவிக்க நிபந்தனை



ஒக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்த ஹமாஸ் அமைப்பினர், ஆயிரத்திற்கு மேற்பட்டோரை கொன்று, பலரை பணயக் கைதிகளாக பிடித்து சென்றனர்.

இதனை தொடர்ந்து ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழிக்க போவதாக இஸ்ரேல் உறுதி எடுத்து, அவர்கள் ஒளிந்திருக்கும் காசா பகுதி மீது வான்வழியாகவும், தரைவழியாகவும் தாக்குதல்கள் நடத்தி வருகிறது.

இதற்கிடையே, பணயக்கைதிகளை விடுவிக்க வலியுறுத்தி ஹமாஸ் அமைப்பினருடன் மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான கத்தார், பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது.

இந்நிலையில், தங்கள் தரப்பு நிலைப்பாட்டையும், கோரிக்கைகளையும் ஹமாஸ் அமைப்பினரின் ஆயுதப்படையான அல்கசாம் ப்ரிகேட்ஸ் (*Alqassam Brigades*) பிரிவின் செய்தித்தொடர்பாளர் அபு உபைதா (*Abu Ubaida*), டெலிகிராம் (*Telegram*) செயலியில் ஹமாஸ் அமைப்பின் அதிகாரபூர்வ கணக்கில் செய்தியாக வெளியிட்டிருக்கிறார்.

அதில் அவர், “காசாவில் 5 நாட்கள் போர் நிறுத்தத்திற்கு இஸ்ரேல் ஒப்பு கொண்டால் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 70 பணயக் கைதிகளை விடுவிக்க நாங்களும் ஒப்பு கொள்கிறோம். ஆனால், அந்த போர் நிறுத்தம் முழுமையானதாக இருக்க வேண்டும். காசா முனை பகுதியில் அனைத்து பகுதிகளுக்கும் மனிதாபிமான உதவிகள் கிடைப்பதையும் இஸ்ரேல் அனுமதிக்க வேண்டும். நாங்கள் வாய்ப்பு அளித்து விட்டோம்; ஆனால், இஸ்ரேல் வேண்டுமென்றே காலதாமதம் செய்து கோரிக்கைகளை புறக்கணித்து, முடிவு எடுப்பதை தள்ளி போடுகிறது” என தெரிவித்துள்ளார்.

இரண்டாவது அரையிறுதிப் போட்டி:

# தென்னாபிரிக்கா எதிர் அவுஸ்திரேலியா



இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், கொல்கத்தாவில் இன்று (16) பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவை தென்னாபிரிக்கா எதிர்கொள்ளவுள்ளது.

இந்த உலகக் கிண்ணத்தைப் பொறுத்த வரையில் இந்தியாவுக்கு அடுத்ததாக சவாலளிக்கும் அணியாக தென்னாபிரிக்காவே காட்சியளிக்கின்றபோதும், உலகக் கிண்ணம் என்று வருகின்ற நிலையில் அவுஸ்திரேலியா மூர்க்கமாக மாறுமென்ற நிலையில் இப்போட்டியில் எதிர்பார்ப்புக்கு பஞ்சமிருக்காதென்றே கருதப்படுகிறது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் விலகல் போட்டிகளில் தென்னாபிரிக்காவை துரதிர்ஷ்டம் துரத்தினாலும் குயின்டன் டி கொக், றஸி வான் டர் டுஸன், ஏய்டன் மார்க்ரம் ஹென்றிச் கிளாசென் என துடுப்பாட்டத்திலும், சகலதுறையில் மார்கோ ஜன்சனும், பந்துவீச்சில் ககிஸோ றபாடா இருப்பதோடு, தெம்பா பவுமாவின் அபாரமான தலைமைத்துவத்தின் கீழ் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும் வாய்ப்பை தென்னாபிரிக்கா கொண்டிருக்கிறது.

மறுபக்கமாக எந்தவொரு நிலையிலிருந்தும் அவுஸ்திரேலியா மீண்டு வந்து வெல்லுமென கிளென் மக்ஸ்வெல்லின் ஆப்கானிஸ்தானுக்கெதிரான இனிங்ஸ் சொல்லப்பட்டாலும் டேவிட் வோர்னர், ட்ரெவிஸ் ஹெட், மிற்செல் மார்ஷ் ஆகியோரில் ஒருவரின் பெரிய இனிங்ஸிலேயே அவுஸ்திரேலியாவின் வெற்றிவாய்ப்பு தங்கியிருக்கிறது.

எதிர்பார்க்கப்படும் தென்னாபிரிக்க அணி: 1. குயின்டன் டி கொக் (விக்கெட் காப்பாளர்), 2. தெம்பா பவுமா (அணித்தலைவர்), 3. றஸி வான் டர் டுஸன், 4. ஏய்டன் மார்க்ரம், 5. ஹென்றிச் கிளாசென், 6. டேவிட் மில்லர், 7. மார்கோ ஜன்சன், 8. ககிஸோ றபாடா, 9. கேஷவ் மஹராஜ், 10. லுங்கி என்கிடி, 11. தப்ரையாஸ் ஷம்சி.

எதிர்பார்க்கப்படும் அவுஸ்திரேலிய அணி: 1. டேவிட் வோர்னர், 2. ட்ரெவிஸ் ஹெட், 3. மிற்செல் மார்ஷ், 4. ஸ்டீவன் ஸ்மித், 5. மர்னுஸ் லபுஷைன், 6. ஜொஷ் இங்லிஸ் (விக்கெட் காப்பாளர்), 7. கிளென் மக்ஸ்வெல், 8. பற் கமின்ஸ் (அணித்தலைவர்), 9. மிற்செல் ஸ்டார்க், 10. ஜொஷ் ஹேசில்வூட், 11. அடம் ஸாம்பா.

அமெரிக்கா



# பணயக் கைதிகளுக்கு ஆதரவாக 2.9 இலட்சம் பேர் பேரணி

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையேயான மோதல் ஒரு மாதத்திற்கும் மேலாக தொடர்ந்து நீடித்து வரும் நிலையில், இந்த போரில் இரு தரப்பிலும் பல்லாயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் இஸ்ரேலில் இருந்து காசாவுக்கு 240 பேர் பணயக் கைதிகளாக பிடித்து செல்லப்பட்டுள்ளனர்.


அவர்களை மீட்கும் பணியில் இஸ்ரேல் பாதுகாப்பு படை தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில், இஸ்ரேல் நாட்டில் இருந்து காசாவுக்கு பிடித்து செல்லப்பட்ட பணயக் கைதிகளை விடுவிக்க கோரி, அமெரிக்காவின் வொஷிங்டன் டி.சி.யில் 2.9 இலட்சம் பேர் பேரணியாக சென்றுள்ளனர்.

இந்த பேரணியில், பங்கேற்றவர்கள் பணயக் கைதிகளுக்கு ஆதரவாக வாசகங்கள் அடங்கிய ஆடைகளை அணிந்தபடி காணப்பட்டனர். ஒக்டோபர் 7ஆம் திகதிக்கு பின்னர் இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்காவில் அதிக அளவில் மக்கள் கூடிய நிகழ்வாக இது உள்ளது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

போரில் பலியான ஐ.நா. ஊழியர்களின்

# எண்ணிக்கை 100-ஐ கடந்தது



இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினர் இடையிலான போர் ஒரு மாதத்தைக் கடந்துள்ளது. இரு தரப்பிலும் பலி எண்ணிக்கை 12 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

ஹமாஸ் நிர்வகித்து வரும் காசா முனை பகுதி மீது இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. தொடர் குண்டு வீச்சு காரணமாக ஆயிரக்கணக்கானோர் காசாவில் உள்ள மருத்துவமனைகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இந்நிலையில், இஸ்ரேல்-ஹமாஸ் போர் தொடங்கி உயிரிழந்த ஐ.நா. ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் எண்ணிக்கை 102 ஆக அதிகரித்துள்ளது. மேலும் 27 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இதுவரை நடந்த போர்களிலேயே இந்தப் போரில் தான் மிக அதிக எண்ணிக்கையிலான ஐ.நா. சபை ஊழியர்கள் உயிரிழந்துள்ளனர் என ஐ.நா.வைச் சேர்ந்த தொண்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

# பாண்டியா இல்லை



அவுஸ்திரேலியாவுக்கு எதிராக எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ள இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரில் இந்தியாவின் சகலதுறைவீரர் ஹர்டிக் பாண்டியா பங்கேற்க மாட்டார் எனத் தெரிகிறது. இத்தொடருக்கான இந்திய அணியானது நேற்றுத் தெரிவு செய்யப்பட்ட நிலையில், உலகக் கிண்ணக் குழாமிலுள்ள பெரும்பாலானவர்களுக்கு இத்தொடரில் ஓய்வளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆசியப் போட்டிகளில் விளையாடியோரில் பெரும்பாலானோரே இத்தொடரில் பங்கேற்பர் எனவும் தெரிகிறது.

இதேவேளை, இத்தொடரில் இந்திய அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக வி.வி.எஸ் லக்ஸ்மன் இருப்பார் எனத் தெரிகிறது.

# யுனைட்டெட்டிலிருந்து வெளியேறும் கஸெமீரோ?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் மத்தியகள வீரரான கஸெமீரோவை வாங்க அணிகள் முன்வந்தால் அதை யுனைட்டெட் கருத்திற் கொள்ளும் எனத் தெரிகிறது.

கடந்தாண்டே யுனைட்டெட்டில் இணைந்த 31 வயதான கஸெமீரோவை கைச்சாத்திட சவூதி அரேபியக் கழகங்கள் முயல்கிறமை குறிப்பிடத்தக்கது.



சண்டிகர்

# தெருநாய் கடிக்குமாயின் பல்லுக்கு ஏற்ப இழப்பீடு

தெருவோரம் சுற்றித்திரியும் கட்டாக்காலிகள் மனிதர்களை தாக்குவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த சூழலில், தெருவிலங்குகளால் பாதிக்கப்பட்டமை தொடர்பாக 193 மனுக்களை பஞ்சாப்-ஹரியாணா உயர் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

அப்போது நீதிபதி, “நாய், மாடு போன்ற கால்நடை விலங்குகளால் தாக்கப்படுபவர்களுக்கு இழப்பீடுகள் வழங்குவதற்கு அரசு முதன்மையான பொறுப்பை ஏற்க வேண்டும். தெருநாய்க் கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒவ்வொரு பல் அடையாளத்துக்கும் குறைந்த பட்சம் ரூ.10,000 இழப்பீடு வழங்க முன்வர வேண்டும். அதேபோன்று, 0.2 சென்டி மீட்டர் காயத்துக்கு குறைந்தபட்சம் ரூ.20,000 இழப்பீட்டை வழங்க வேண்டும்” என உத்தரவிட்டார்.

திருப்பதி


# திருப்பதியில் சன்மானம்

திருமலை திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு கூட்டம் திருப்பதி மலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை அறங்காவலர் குழு தலைவர் கருணாகர ரெட்டி விவரித்துள்ளார். அதன்படி, தேவஸ்தானத்தில் பணியாற்றும் நிரந்தர ஊழியர்களுக்கு தலா 14 ஆயிரம் ரூபாயும், ஒப்பந்த ஊழியர்களுக்கு தலா 6 ஆயிரத்து 850 ரூபாயும் பிரம்மோற்சவ சன்மானமாக வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

பிரம்மோற்சவ சன்மானம் வழங்க மொத்தமாக சுமார் 20 கோடி ரூபாய் வரை செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

> **“ சீனிவாச திவ்ய அனுகிரக விசேஷ ஹோமத்தில் கலந்து கொள்ள விரும்பும் பக்தர்கள், தலா ஆயிரம் ரூபாய் செலுத்தி நேரடியாகவோ அல்லது ஒன்லைன் மூலமாகவோ பதிவு செய்து கொள்ளலாம்**

எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறும் சீனிவாச திவ்ய அனுகிரக விசேஷ ஹோமத்தில் கலந்து கொள்ள விரும்பும் பக்தர்கள், தலா ஆயிரம் ரூபாய் செலுத்தி நேரடியாகவோ அல்லது ஒன்லைன் மூலமாகவோ பதிவு செய்து கொள்ளலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.



# பார்சிலோனாவில் தொடரும் ஜோவா பீலிக்ஸ்?



ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவானது, தமது முன்களவீரர் ஜோவா பீலிக்ஸ் கொண்டுள்ள பிரகாசமான பருவகாலம் காரணமாக அவரை நிரந்தரமாகக் கைச்சாத்திட எதிர்பார்த்துள்ளது.

இன்னொரு லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட்டிடமிருந்து கடனடிப்படையில் 24 வயதான பீலிக்ஸை பார்சிலோனா ஒப்பந்தம் செய்துள்ள நிலையில், சில அடைவு மட்டங்களைச் சந்தித்தால் அவரை நிரந்தரமாக ஒப்பந்தம் செய்யும் குறிப்பொன்றுடன் அவரை மேலுமொரு ஆண்டுக்கு கடனடிப்படையில் ஒப்பந்த நீடிப்பை மேற்கொள்ள முனைகிறது.



# றபின்ஹாவின் பெறுமதி 70 மில்லியன் யூரோ?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் முன்களவீரரான றபின்ஹாவை ஒப்பந்தம் செய்ய 70 மில்லியன் யூரோக்களை அக்கழகம் நிர்ணயித்துள்ளது.

பார்சிலோனாவிலிருந்து வெளியேற 26 வயதான றபின்ஹா விரும்பாதபோதும், அவரின் பெறுபேறுகள் இப்பருவகாலத்தில் சொல்லிக் கொள்ளும்படியாக இல்லாத நிலையில் குறித்த தொகை வந்தால் அவரை பார்சிலோனா விற்கும் எனக் கருதப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 16 நவம்பர் 2023, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.